Sl. No. :

# EO3GT

பதிவு எண் | | | | | | | | | |

2019

# பொதுத் தமிழும் பொது அறிவும்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்டவற்றை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. **குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசிப் பக்கத்திற்கு முன் உள்ள பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம். இதைத் தவிர, வினாத் தொகுப்பின் எந்த இடத்திலும் எந்த வித குறிப்புகளையும் செய்யக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
11. 101 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
12. விண்ணப்பதாரர்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் 2-ல் அதற்கென உரிய கட்டத்தில் எழுதி நிரப்பவும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
13. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS

SEAL

SPACE FOR ROUGH WORK

1. 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' எனப் பாடியவர்

(A) திருவள்ளுவர்

(B) திருமூலர்

(C) சீத்தலைச் சாத்தனார்

(D) திருத்தக்கத் தேவர்

2. நான் தனியாக வாழவில்லை; தமிழோடு வாழ்கிறேன் எனக் கூறியவர்

(A) திரு.வி. கலியாண சுந்தரனார்

(B) தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

(C) உ.வே. சாமிநாத ஐயர்

(D) சி. இலக்குவனார்

3. சிற்றோடை – பிரித்தெழுதுக

(A) சிற்று + ஓடை

(B) சிறுமை + ஓடை

(C) சிறு + ஓடை

(D) சிற் + ஓடை

4. கண்டெடுக்கப்பட்டுள்ளன – பிரித்து எழுதுக.

(A) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன

(B) கண்டு + எடுக்கப் + பட்டுள்ளன

(C) கண்டெடுக்க + பட்டு + உள்ளன

(D) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன

5. நெடில்தொடர்க் குற்றியலுகரம் எத்தனை எழுத்துகளைப் பெற்று வரும்?

(A) இரண்டு

(B) மூன்று

(C) நான்கு

(D) ஐந்து

6. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்

Smart Phone

(A) கைப்பேசி

(B) சிறிய தொலைபேசி

(C) திறன் பேசி

(D) அழகான பேசி

7. மரவேர் என்பது எவ்வகை புணர்ச்சி?

(A) இயல்பு புணர்ச்சி

(B) திரிதல் புணர்ச்சி

(C) தோன்றல் புணர்ச்சி

(D) கெடுதல் புணர்ச்சி

8. தலைவனை குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி

(A) கோ

(B) தீ

(C) ஐ

(D) சோ

9. பாடினாள் – வேர்ச்சொல் தருக.

(A) பாடி

(B) பாடுதல்

(C) பாடு

(D) படு

10. இலக்கணக் குறிப்பு தருக.

எய்தி

(A) பெயரெச்சம்

(B) வினையெச்சம்

(C) பண்புத் தொகை

(D) வினைத் தொகை

11. இலக்கணக் குறிப்புத் தருக.

சித்திரைத் திங்கள்

(A) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

(B) பண்புத் தொகை

(C) வினைத் தொகை

(D) வேற்றுமைத் தொகை

12. தழீஇ – என்பதன் இலக்கணக் குறிப்பு எழுதுக

(A) சொல்லிசையளபெடை

(B) ஒற்றளபெடை

(C) இன்னிசையளபெடை

(D) இசைநிறையளபெடை

13. மருதத்திணையின் பறை எது?

(A) தொண்டகம்

(B) மணமுழா

(C) ஏறு கோட்பறை

(D) மீன் கோட்பறை

14. இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எவ்வகைத் தொடை?

(A) மோனைத் தொடை

(B) இயைபுத் தொடை

(C) எதுகைத் தொடை

(D) முரண் தொடை

15. அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்

அஃதறி கல்லா தவர்.

– இக்குறட்பாவில் பயின்றுள்ள அடி மோனையை எழுது.

(A) அறிவுடையார் – அறிவிலார்

(B) அறிவுடையார் – அஃதறி

(C) அறிவிலார் – அஃதறி

(D) அறிவுடையார் – ஆவ

16. "இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே"

– இது யாருடைய பாராட்டுரை

(A) பாரதிதாசன்

(B) பாரதியார்

(C) நாமக்கல் கவிஞர்

(D) கவிமணி தேசிக விநாயகம்

17. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை எவை?

I. வீட்டிற்கு வந்த உறவினர்களை வரவேற்று உபசரித்தல்

II. அறிவில்லாதவர் கூறும் சொற்களை பொறுத்தல்

III. வீட்டிற்கு வந்த உறவினர்களை வரவேற்று உபசரிக்காமல் இருத்தல்

IV. உடல் நலத்தை பேணாதிருத்தல்

(A) I மற்றும் II சரியானவை

(B) I மற்றும் III சரியானவை

(C) III மற்றும் IV சரியானவை

(D) II மற்றும் IV சரியானவை

18. பின்வருவனவற்றுள் தவறானதைத் தேர்வு செய்க

(A) திருமுருகாற்றுப்படையைப் பாடியவர் நக்கீரர்

(B) பொருநராற்றுப்படையைப் பாடியவர் கபிலர்

(C) சிறுபாணாற்றுப்படையைப் பாடியவர் நல்லூர் நத்தத்தனார்

(D) பெரும்பாணாற்றுப்படையைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார்

19. பின்வருவனவற்றில் பொருந்தாததைத் தேர்வு செய்க

(A) நாலடியாரில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பகுப்புகள் உள்ளன

(B) நாலடியாரை இயற்றியவர் நல்லாதனார்

(C) நாலடியாரில் 400 வெண்பாக்கள் உள்ளன

(D) "நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" என்பதில் நாலு என்பது நாலடியாரைக் குறிக்கும்

20. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | இடர் | 1. | நிலவு |
| (b) | நாவாய் | 2. | துன்பம் |
| (c) | இறை | 3. | படகு |
| (d) | இந்து | 4. | தலைவன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 1 | 4 | 3 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

21. கம்பராமாயணத்தில் சுந்தரகாண்டம்

(A) முதற்காண்டம்

(B) ஐந்தாங்காண்டம்

(C) ஏழாங்காண்டம்

(D) மூன்றாம் காண்டம்

22. அகநானூற்றில் மணிமிடை பவளத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

(A) 100

(B) 120

(C) 180

(D) 130

23. நற்றிணையைத் தொகுப்பித்தவர் யார்?

(A) பெருந்தேவனார்

(B) போதனார்

(C) பரணர்

(D) பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

24. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | செறு | 1. | பனையோலைப் பெட்டி |
| (b) | வித்து | 2. | புதுவருவாய் |
| (c) | யாணர் | 3. | விதை |
| (d) | வட்டி | 4. | வயல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

25. சிலப்பதிகாரத்திற்கு எவ்வுரையாசிரியரின் உரை நூல் முழுமைக்கும் உள்ளது?

(A) இளம்பூரனார்

(B) அடியார்க்கு நல்லார்

(C) ந.மு. வேங்கடசாமி நாட்டார்

(D) அரும்பத உரைக்காரர்

26. சேக்கிழாரை "பக்திச் சுவை நனிசொட்டச் சொட்ட பாடிய கவிவலவ" எனப் புகழ்ந்துரைத்தவர்

(A) மகா வித்துவான் மீனாட்சி சுந்தரனார்

(B) கவிஞர். வெ. இராமலிங்கனார்

(C) பெ. சுந்தரனார்

(D) நா.மு. வேங்கடசாமி நாட்டார்

27. கூற்று : 1 சேக்கிழாரின் இயற்பெயர் அருண்மொழித்தேவர்

கூற்று : 2 பெரியபுராணத்திற்கு சேக்கிழார் இட்டபெயர் திருத்தொண்டர் புராணம்

(A) கூற்று 1 மட்டும் சரி

(B) கூற்று 2 மட்டும் சரி

(C) கூற்று இரண்டும் தவறு

(D) கூற்று இரண்டும் சரி

28. கூற்று : 1 உமறுப்புலவர் எட்டயபுரம் கடிகை முத்துப்புலவரின் மாணவர்

கூற்று : 2 உமறுப்புலவரின் மற்றொரு நூல் முதுமொழிக் காஞ்சி

(A) கூற்று இரண்டும் சரி

(B) கூற்று 2 மட்டும் சரி

(C) கூற்று 1 மட்டும் சரி

(D) கூற்று இரண்டும் தவறு

29. "மாதிரத்துறை கேசரிநிகர்முகம்மதுதம்"

பொருள் விளங்குமாறு பிரித்து எழுதுக?

(A) மாதிரத் துறைகே சரிநிகர் முகம் மதுதம்

(B) மாதி ரத்துறை கேசரிநி கர்முகம் மதுதம்

(C) மாதிரத்துறை கேசரிநிகர் முகம்மதுதம்

(D) மாதி ரத்துறை கேசரி நிகர்முகம் மதுதம்

30. குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்

வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர்

- இவ்வடிகளில் 'குட்டி' என்னும் சொல் குறிக்கும் பொருள் என்ன?

(A) ஆட்டுக்குட்டி

(B) பூனைக்குட்டி

(C) தலையில் குட்டுதல்

(D) பிள்ளைப் பெறல்

31. "பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு" இப்பாடல் வரியில் - 'பணை' என்னும் சொல்லின் பொருள் தருக?

(A) முத்து

(B) மரம்

(C) மூங்கில்

(D) காற்று

32. கூற்று : 1 தமிழில் தோன்றிய முதல் கலம்பகம் நந்திக்கலம்பகம்

கூற்று : 2 நந்திக்கலம்பகத்தை இயற்றியவர் நந்திவர்மன்

(A) கூற்று இரண்டும் சரி

(B) கூற்று 1 மட்டும் சரி

(C) கூற்று 2 மட்டும் சரி

(D) கூற்று இரண்டும் தவறு

33. 'கொம்பினை யொத்த மடப்பிடி' - யார்?

(A) சீதை

(B) பாஞ்சாலி

(C) துச்சலை

(D) மந்தாரை

34. இரட்சணியயாத்திரிகம் என்பதன் பொருள் யாது?

(A) இறைவனை வணங்குவது

(B) இறைவனை நோக்கிச் செல்லும் பயணம்

(C) இறையடியார்களை வணங்குவது

(D) துறவறம் பூணுவது

35. குலசேகர ஆழ்வார் பிறந்த நாடு எது?

(A) பாண்டிய நாடு

(B) பல்லவ நாடு

(C) சோழ நாடு

(D) சேர நாடு

36. "கன்னல் பொருள் தரும் தமிழே நீ ஓர் பூக்காடு: நானோர் தும்பி!"

என்று தமிழ்க் காதல் கொண்டு வாழ்ந்தவர் யார்?

(A) வரதராசனார்

(B) பாரதியார்

(C) வாணிதாசன்

(D) பாரதிதாசன்

37. உப்புச் சத்தியாகிரகத் தொண்டர்கள் வழிநடைப் பாடலாக பாடக்கூடிய "கத்தியின்றி ரத்தமின்றி யுத்த மொன்று வருகுது" என்று வழிநடைப் பாடலை இயற்றியவர்

(A) மகாகவி பாரதியார்

(B) நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்

(C) அ. வரதநஞ்சையப்ப பிள்ளை

(D) புரட்சி கவிஞர் பாரதிதாசனார்

38. கவிதைகளில் குறியீட்டியம் (Symbolism) என்ற கவிதை உத்தியைக் கையாண்டவர் யார்?

(A) பாப்லோ நெரூடா

(B) ஸ்டெஃபான் மல்லார்மே

(C) வால்ட் விட்மன்

(D) இரசூல் கம்சதோவ்

39. "உயிர்த்தெழும் காலத்துக்காக" என்றத் தலைப்பில் யாருடைய கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளது?

(A) சு. வில்வரத்தினம்

(B) கா. சிவத்தம்பி

(C) இந்திரன்

(D) ந. கருணாநிதி

40. காந்தியடிகளால் 'தென்னாட்டின் ஜான்சிராணி' என அழைக்கப்பட்டவர் யார்?

(A) அஞ்சலையம்மாள்

(B) அம்புஜத்தம்மாள்

(C) வேலு நாச்சியார்

(D) தில்லையாடி வள்ளியம்மை

41. பெண்கள் மறுமணத்தை ஆதரித்தவர் யார்?

(A) கவிமணி

(B) பாரதி

(C) பெரியார்

(D) திரு.வி.க

42. கோவில்களில் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப்பெறும் மரபு யார் காலத்தில் தொடங்கியது?

(A) இரண்டாம் குலோத்துங்கன்

(B) இராசராசன்

(C) விசித்திர சித்தன்

(D) இராசேந்திரன்

43. தமிழ்நாட்டின் மாநில மரம் எது?

(A) தென்னை மரம்

(B) பனை மரம்

(C) ஆல மரம்

(D) மாமரம்

44. தமிழ்மொழியை "உயர்தனிச்செம்மொழி" என முதன் முதலில் நிலைநாட்டிய தமிழ் அறிஞர்

(A) பரிதிமாற் கலைஞர்

(B) மறைமலையடிகள்

(C) ரா.பி. சேதுப்பிள்ளை

(D) திரு.வி.க

45. பரிதிமாற் கலைஞர், 'வசனநடை கைவந்த வல்லாளர்' என யாரைப் பாராட்டுகிறார்?

(A) ரா.பி. சேதுப்பிள்ளை

(B) வையாபுரிப் பிள்ளை

(C) ஆறுமுக நாவலர்

(D) ந.மு. வேங்கடசாமி நாட்டார்

46. ஒரு நாளில் பதினெட்டு மணிநேரத்தைக் கல்வி கற்பதற்காகவே செலவழித்தவர் யார்?

(A) அண்ணல் காந்தியடிகள்

(B) அண்ணல் அம்பேத்கார்

(C) அருணாசலக்கவிராயர்

(D) ஆபிரகாம் பண்டிதர்

47. காமராசர் முதல் அமைச்சராகப் பதவி ஏற்ற ஆண்டு எது?

(A) 1954

(B) 1955

(C) 1956

(D) 1964

48. தமிழகத்தில் இன்று காணப்பெறும் குடைவரைக் கோயில்களுள் பழைமையானது எவ்வூரில் உள்ளது?

(A) கோவில்பட்டி

(B) பிள்ளையார்ப்பட்டி

(C) ஆண்டிப்பட்டி

(D) உசிலம்பட்டி

49. உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை எத்தனை?

(A) ஆறுகோடிப்பேர்

(B) ஏழுகோடிப்பேர்

(C) எட்டுக்கோடிப்பேர்

(D) ஒன்பதுக்கோடிப்பேர்

50. பொருத்தமான விடையைத் தேர்க :

(a) சிறுபஞ்சமூலம் 1. காப்பிய இலக்கியம்

(b) குடும்ப விளக்கு 2. சங்க இலக்கியம்

(c) சீவக சிந்தாமணி 3. அற இலக்கியம்

(d) குறுந்தொகை 4. தற்கால இலக்கியம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

51. பொருத்துக :

(a) ஐகாரக் குறுக்கம் 1. கஃஃறீது

(b) ஔகாரக் குறுக்கம் 2. மருண்ம்

(c) மகரக் குறுக்கம் 3. தலைவன்

(d) ஆய்தக் குறுக்கம் 4. வௌவால்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

52. மரபுப் பிழையைக் கண்டறிந்து பொருத்துக :

(a) காகம் 1. கூவும்

(b) குதிரை 2. கரையும்

(c) நரி 3. கணைக்கும்

(d) குயில் 4. ஊளையிடும்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

53. பொருந்தாத சொல்லைக் கண்டறிக

(A) சேர்ப்பன்

(B) சோ்த்தியர்

(C) பரதன்

(D) பரத்தியர்

54. ஒருமை பன்மை பிழையற்ற தொடர் எது?

(A) அவன் கவிஞன் அல்ல

(B) அவன் கவிஞன் அன்று

(C) அவன் கவிஞன் அல்லன்

(D) கவிஞன் அல்ல அவன்

55. மரபுத் தொடரின் பொருளறிக

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது

(A) இல்லாத ஒன்று

(B) சுரைக்காயை சமைக்க முடியாது

(C) பட்டறி வில்லாத படிப்பறிவு

(D) பயனின்றி இருத்தல்

56. அப்பிசி மாசம் அடமள இம்பாங்க என்ற தொடரில் கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக

(A) அப்பிசி மாதம் அடமழை இம்பாங்க

(B) ஐப்பசி மாசம் அடமழை என்பாங்க

(C) ஐப்பசி மாதம் அடைமழை என்பார்கள்

(D). அய்ப்பசி மாதம் அடைமழை இன்பார்கள்

57. படி என்ற அடிச் சொல்லில் இருந்து வினையாலணையும் பெயரை உருவாக்கு

(A) படித்து

(B) படித்தல்

(C) படித்த

(D) படித்தவர்

58. அகர வரிசையில் எழுதுக

வெகுளாமை, வேப்பிலை, வீடுபேறு, வாழ்க்கை, வையம்

(A) வையம், வாழ்க்கை, வீடுபேறு, வெகுளாமை, வேப்பிலை

(B) வாழ்க்கை, வீடுபேறு, வெகுளாமை, வேப்பிலை, வையம்

(C) வீடுபேறு, வெகுளாமை, வையம், வேப்பிலை, வாழ்க்கை

(D) வெகுளாமை, வீடுபேறு, வேப்பிலை, வையம், வாழ்க்கை

59. சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

பற்றற்றான் பற்று விடற்கு பற்றினை பற்றுக அப்பற்றை பற்றுக

(A) பற்றுக பற்று விடற்கு அப்பற்றைப் பற்றுக பற்றற்றான் பற்றினை

(B) பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு பற்றுக

(C) பற்றுக விடற்கு பற்று அப்பற்றை பற்றுக பற்றினை பற்றான்

(D) பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு

60. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | இடுகுறிப் பொதுப் பெயர் | 1. | மரங்கொத்தி |
| (b) | இடுகுறிச் சிறப்புப் பெயர் | 2. | பறவை |
| (c) | காரணப் பொதுப் பெயர் | 3. | காடு |
| (d) | காரணச் சிறப்புப் பெயர் | 4. | பனை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

61. முல்லைத் திணையின் தெய்வம் எது?

(A) முருகன்

(B) வருணன்

(C) இந்திரன்

(D) திருமால்

62. தேன்மொழி பொன்னியிடம், “நான், நாளை மதுரைக்குச் செல்வேன்” என்றாள். எவ்வகைத் தொடர் என்று கண்டறிக

(A) நேர்க்கூற்றுத் தொடர்

(B) அயற்கூற்றுத் தொடர்

(C) உடன்பாட்டுத் தொடர்

(D) எதிர்மறைத் தொடர்

63. பிறவினைத் தொடராக மாற்றுக

கலைச் செல்வி திருக்குறள் கற்றாள்

(A) திருக்குறள் கலைச் செல்வியால் கற்கப்பட்டது

(B) கலைச் செல்வி திருக்குறள் கற்பித்தாள்

(C) கலைச் செல்வி திருக்குறளை கற்கிறாள்

(D) கலைச் செல்வி திருக்குறள் பயின்றாள்

64. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு. அடிக்கோடிட்ட உவமைக்குப் பொருள் தருக?

(A) ஊருணி நீர் குறைதல் போல

(B) ஊருணி நீர் சுடுதல் போல

(C) ஊருணி நீர் கெடுதல் போல

(D) ஊருணி நீர் நிறைதல் போல

65. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு

வேளாண்மை செய்தல் பொருட்டு

– இக்குறட்பாவில் 'வேளாண்மை' என்றச் சொல்லின் பொருள்

(A) பயிர்த்தொழில்

(B) உதவி செய்தல்

(C) முயற்சி செய்தல்

(D) பயிற்சி அளித்தல்

66. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு

– எனும் குறளில் என்பு – என்பது எதைக் குறிக்கிறது?

(A) கண்கள்

(B) இருகைகள்

(C) ஐம்பொறிகள்

(D) எலும்பு

67. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து

வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' – என்ற தொடரை எழுதியவர் யார்?

(A) பாரதியார்

(B) பாரதிதாசன்

(C) கவிமணி

(D) சுரதா

68. வனப்பு என்னும் சொல்லின் பொருள்

(A) அழகு

(B) அறிவு

(C) வளமை

(D) எளிமை

69. "அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்

மடவரல் மகளிர்க்கும் மறம்மிகுத் தன்று"

என்ற பாடல் உணர்த்தும் துறை எது?

(A) பொருண் மொழிக்காஞ்சி

(B) முதுமொழிக்காஞ்சி

(C) மூதின் முல்லை

(D) முதுமொழி மாலை

70. "உறுமிடத்து உதவாது உவர்நிலம்

ஊட்டியும்" – இடம்பெற்ற பாடலடி அமைந்த நூல் எது?

(A) அகநானூறு

(B) ஐங்குறுநூறு

(C) புறநானூறு

(D) திணைமாலை ஐம்பது

71. நற்றிணையின் பேரெல்லை 12 அடியாக இருப்பினும் விதி விலக்காக 13 அடி கொண்ட பாடலை எழுதியது யார்?

(A) கபிலர்

(B) நக்கீரர்

(C) மாறனார்

(D) போதனார்

72. கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்

உண்பது நாழி உடுப்பவை இரண்டே

பிறவும் எல்லாம், ஓர்ஒக் கும்மே"

– இப் பாடலடிகள் இடம் பெற்ற நூல்

(A) குறுந்தொகை

(B) நற்றிணை

(C) புறநானூறு

(D) அகநானூறு

73. தேனிலே ஊறிய செந்தமிழின் – சுவை

தேரும் சிலப்பதிகாரம் என்று பாராட்டியவர்

(A) பாரதிதாசன்

(B) பாரதியார்

(C) சுரதா

(D) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

74. அப்பூதியடிகள் களவு ————, ————, ———— நீக்கியவர்?

(A) இல்லாமை, கொல்லாமை, புல்லாமை

(B) பொய், காமம், சினம்

(C) குற்றம், சீற்றம், பொய்

(D) அழுக்காறு, அவா, வெகுளி

75. சிந்தாமணியே என்று அழைக்கப்பட்டவர்

(A) நபுலன்

(B) சீதத்தன்

(C) சீவகன்

(D) கலுழவேகன்

76. பின்வருவனவற்றுள் பொருந்தாததைத் தேர்வு செய்க

(A) இரட்டைக் காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம்

(B) சிலப்பதிகாரம் ஒரு சமணக்காப்பியம்

(C) தமிழில் தோன்றிய முதற்காப்பியம் சிலப்பதிகாரம்

(D) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார்

77. முக்கூடற்பள்ளு நூலின் ஆசிரியர் பெயர்

(A) கபிலர்

(B) பரணர்

(C) நக்கீரர்

(D) பெயர் தெரியவில்லை

78. ‘மதோன்மத்தர்’ என அழைக்கப்படுபவர் யார்?

(A) பெருமாள்

(B) திருமால்

(C) இயேசு

(D) சிவபெருமான்

79. ‘முக்கூடற்பள்ளு’ இலக்கியத்தை நாடகவடிவில் இயற்றியவர் யார்?

(A) கன்னாயினாப் புலவர்

(B) என்னாயினாப் புலவர்

(C) கண்ணாயினாப் புலவர்

(D) என்னயினாப் புலவர்

80. பிரபந்தம் என்னும் வடச் சொல் உணர்த்தும் பொருள்

(A) நகைச்சுவை நூல்

(B) நன்கு கட்டப்பட்டது

(C) அறிவுரை நூல்

(D) அறநூல்

81. ‘பாஞ்சாலி சபதம்’ - எப்பாவகையைச் சார்ந்தது?

(A) வெண்பா

(B) ஆசிரியப்பா

(C) சிந்து

(D) கலிப்பா

82. “லிட்டன் பிரபு” எழுதிய “இரகசிய வழி” என்ற நூலை தழுவி எழுதப்பட்ட தமிழ் பாடல் வடிவ நாடக நூல் எது?

(A) பிசிராந்தையார்

(B) மனோன்மணியம்

(C) சிவகாமியின் சரிதம்

(D) பில்கணீயம்

83. “வரையழி வாலருவி வாதாலாட்ட” - இவ்வடியில் வரும் ‘தாலாட்டு’ என்ற சொல்லாட்சி காணப்பெறும் எட்டுத்தொகை நூல்

(A) அகநானூறு

(B) குறுந்தொகை

(C) பரிபாடல்

(D) ஐங்குறுநூறு

84. பண்டைக்காலத்தில் முழுமதி நன்னாட்களிலும், மாலைநேரத்திலும் ஆடவரும் மகளிரும் கூடி வட்டமாய் நின்று கைகோத்து ஆடும் கூத்து எது?

(A) பாவைக் கூத்து

(B) குரவைக்கூத்து

(C) தெருக் கூத்து

(D) ஒயிலாட்டம்

85. பாவேந்தர் பாரதிதாசனின் தலைமாணாக்கராக போற்றப்பட்டவர் யார்?

(A) வாணிதாசன்

(B) மோகன ரங்கன்

(C) சுரதா

(D) அப்துல் ரகுமான்

86. பின்வருவனவற்றைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | குயில் பாட்டு | 1. | அப்துல் ரகுமான் |
| (b) | அழகின் சிரிப்பு | 2. | சுரதா |
| (c) | துறைமுகம் | 3. | பாரதியார் |
| (d) | பால்வீதி | 4. | பாரதிதாசன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

87. எந்த இணை சரியானது

(A) சுரதா – இமயம் எங்கள் காலடியில்

(B) தாரா பாரதி – இது எங்கள் கிழக்கு

(C) வாணிதாசன் – சுட்டுவிரல்

(D) மு. மேத்தா – பசிக்கயிறு

88. வால்ட் விட்மன்,

கூற்று : 1 புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்.

கூற்று : 2 "புல்லின் இதழ்கள்" என்ற நூலை எழுதியவர்.

(A) கூற்று 1 மட்டும் சரி

(B) கூற்று 2 மட்டும் சரி

(C) கூற்று இரண்டும் சரி

(D) கூற்று இரண்டும் தவறு

89. தமிழ் நாடகத் தந்தை என்று போற்றப்படுபவர்

(A) பம்மல் சம்பந்தனார்

(B) சங்கரதாசு சுவாமிகள்

(C) தி.க. சண்முகனார்

(D) மறைமலையடிகள்

90. பாவேந்தர் பாரதிதாசனால் எழுதப்பட்ட "சாகித்திய அகாதெமிப்" பரிசு பெற்ற நாடக நூல் எது?

(A) சேர தாண்டவம்

(B) குடும்ப விளக்கு

(C) குறிஞ்சித் திரட்டு

(D) பிசிராந்தையார்

91. சி.சு. செல்லப்பாவின் எந்த இதழ் நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டது?

(A) எழுத்தாணி

(B) எழுத்து

(C) அகரம்

(D) சிகரம்

92. சி.சு. செல்லப்பாவின் எந்த நூல் சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளது?

(A) சுதந்திர தாகம்

(B) ஆங்கில மோகம்

(C) ஜீவனாம்சம்

(D) சுதந்திரப் பறவை

93. தமிழில் வந்த முதல் அறிவியல் இதழ்

(A) தமிழர் நேசன்

(B) அமுதசுரபி

(C) கலைமகள்

(D) பாரதமணி

94. ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் சங்க நூல்கள் எழுதுக

(A) பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு

(B) குறிஞ்சிப்பாட்டு, பதிற்றுப்பத்து

(C) மதுரைக் காஞ்சி, முல்லைப்பாட்டு

(D) மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை

95. தொண்டைக்கட்டைத் தொலைக்கும் உணவுப் பொருள் எது?

(A) மிளகு

(B) வெந்தயம்

(C) கடுகு

(D) சீரகம்

96. துள்ளம் என்னும் தற்பொழுது ———————— என அழைக்கப்படுகிறது.

(A) மண்டலம்

(B) தண்டலம்

(C) போரூர்

(D) காட்டூர்

97. உ.வே.சா. 'தன் சரிதம்' என்னும் வரலாற்று நூலை எந்த இதழில் தொடராக எழுதினார்?

(A) சுதேசமித்திரன்

(B) ஆனந்த விகடன்

(C) தினமணி

(D) இந்தியா

98. தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் யார்?

(A) பரணர்

(B) பாரி

(C) தேவநேயப்பாவாணர்

(D) பெருந்தேவர்

99. வீரமாமுனிவர் திருக்குறளை எந்த மொழியில் மொழிபெயர்த்தார்?

(A) ஆங்கிலம்

(B) பிரெஞ்சு

(C) கனடா

(D) இலத்தீன்

100. 'இந்தியாவின் தேசியப் பங்குவீதம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?

(A) அண்ணல் அம்பேத்கர்

(B) வில்லியம் மில்லர்

(C) இலக்குவனார்

(D) மகாகவி இரவீந்திரநாத் தாகூர்